தமிழகச் சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1967 ஜூன் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுகுறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல், "வினாக்கள்-விடைகள்". உறுப்பினர் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

சிறுபான்மை வகுப்பினருக்கு வேலை நியமனம்.

* 63 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) மைனாரிட்டி இன மக்களை உத்தியோகத்தில் நியமிப்பதில் ஏதாவது கட்டுப்பாடு உண்டா ?

(இ) எந்தெந்த விஷயங்களில் கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) அரசாங்கப் பணிகளுக்குப் பணியாளர்களை நியமிப்பது சம்பந்தமாக சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களை ஏனைய வகுப்பினர்களிலிருந்து எந்த வகையிலும் வேறுபடுத்துவது இல்லை. ஆயினும் அரிசன வகுப்பினர், ஆதிவாசி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர்க்கென குறிப்பிட்ட சில பதவிகளில் குறித்த சதவீத இடங்களை அரசு ஒதுக்கியுள்ளதென்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் தாய்மொழியாக இல்லாத ஒருவர் மொழிவழிச் சிறுபான்மையினராகக் கருதப்படுகிறார். அவரை முதலில் நியமிக்கும்போது இது குறித்து எவ்விதத் தடையும் இல்லையென்றாலும், அவரது நியமனத் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் தமிழில் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வு எனப்படும் தேர்வு ஒன்றில் அவர் தேர்ச்சி பெறவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதில் அரிசன மக்களுக்கோ, மற்றவர்களுக்கோ உத்தியோகச் சலுகை கம்யூனல் அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருப்பது போன்று முஸ்லிம் மைனாரிட்டி மக்களுக்கு எத்தனை சதவிகிதம் உத்தியோகத்தில் சலுகைக் காட்டி நியமனம் செய்கின்ற அளவிற்கு திட்டம் ஏதாவது இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இப்போது இந்தத் திட்டம் இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு உத்தியோகத்தில் வாய்ப்புகள் தரப்படும் என்ற பெயரிலே முன்பு இருந்த சர்க்கார் அவர்களுக்கு உண்மையிலே வாய்ப்புக்கள் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வில்லை. ஆகவே அவர்களுக்கு வாய்ப்புக்கள் கொடுப்பதற்கு தற்போதுள்ள அரசாங்கம் ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

THIRU K. VINAYAKAM : After the partition of our country into Pakistan and the rest of India, there has been a common feeling among the Muslim community that the privileges enjoyed by them in the matter of appointments and recruitment to Government jobs were denied to them and they have been neglected or relegated to the background and whatever scope was available to them was denied by the State Government as well as the Central Government. Will the Hon. the Chief Minister allay their fears that whatever facilities and whatever percentage of posts were available to them in the past and which they used to get in the past will be continued, and the Government will not neglect their rights, especially in the matter of recruitment to the Police Forces, they have not been neglected and their claims have not been overlooked?

THE HON. THIRU C. N. ANNADURAI : I can appreciate the anxiety of the hon. Member that we should alleviate the apprehension in the minds of Muslims about this. I myself have that feeling that muslims are not getting their due share (interruption) It is a problem which has got its bearing on other parts of India. My feelings or my impressions will have little influence on the general problem.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: சார், அரசாங்க உத்தியோகங் களில் பெண்களுக்குத் தனியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெண்கள் இப் பொழுது பெறுவது சிறப்பான ஸ்தானங்கள் என்று கருதப்படு கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : பெரிய பெரிய உத்தியோகங்களில் மைனாரிட்டி இனத்தார் இருக்கிறார்கள். ஆனால் பெரிய சமூகம் என்று சொல்லக்கூடிய முக்குலத்தோர் சமூகத்தினருக்கு உத்தி யோகத்தில் சலுகைகள் இல்லை. ஏதோ பாக்வர்ட் ஜாதிகள் பட்டியலில் 150 ஜாதிகளில் இதுவும் ஒன்றாக சேர்க்கப்பட்டிருக் கிறதேயொழிய அவர்களுக்கு தனிச்சலுகை அளிக்கப்படவில்லை. ஆகவே, முக்குலத்தோருக்கு உத்தியோகத்தில் தனியாகச் சலுகை அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நம்முடைய சமூக அமைப்பிலே ஒரு விந்தையும் இருக்கிறது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு சமூகமும் தான் தான் உயர்ந்த சமூகம் என்று

1967 ஜூன் 24]

பாத்தியதை கொண்டாடுகிறது. ஆனால், அதே நேரத்தில் வேலை வாய்ப்பில் தான் ஒரு பின்தங்கிய சமூகம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறது. விரைவிலே தகுதியுள்ளவர்கள்தான் தகுதியுள்ள நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்ற நிலை ஏற்படும் என்று நம்புகிறேன்.

திரு. டி. மார்டின்: தமிழக அரசு தங்களுடைய பணியாளர்களை நியமிக்கின்ற நேரத்தில் ஜாதி, மதம், மொழி போன்ற விவரங்களைக் கேட்கிறதா? மேலும் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இதுவரை நியமித்திருக்கிற உத்தியோகஸ்தர்களில் எத்தனை பேர்கள் முகமதியர்கள், எத்தனை பேர்கள் கிருஸ்தவர்கள், எத்தனை பேர்கள் மற்றவர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் கேட்ட இரண்டாவது கேள்விக்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம். முதலாவது பகுதியைப் பொறுத்தவரை மனு செய்கிறபோது ஜாதி, மதம், மொழி இவைகளை எல்லாம் அரசாங்கம் கேட்கிறார்களா என்று கேட்டார்கள். அவற்றை சர்க்கார் கேட்கவில்லை. அவர்களாகவே தெரிவித்துவிடுகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்திலுள்ள மீனவர்கள், சிகையலங்கரிப்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லையென்று புகார் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்புகள் கொடுப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்த ஏற்பாடு செய்வார்களா?

*** மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் குறிப்பிட்ட வகுப்பினர்களை இப்போது பிற்பட்ட இன பட்டியலிலே சேர்த்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்பட்டியலில் அவர்களைச் சேர்ப்பதற்கு வலியுறுத்தி வருகிறார்கள். உரிய காலத்தில் உரிய இடத்தில் வலியுறுத்தப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : மைனாரிட்டி என்பது ஜாதி, மதம், பொருளாதாரம் இவைகளில் சம்பந்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நான் முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். மைனாரிட்டி சமூகத்திலே ஒரு பகுதியினர் பிற்படுத்தப்பட்டு இருப்பதனால் பிற்பட்ட வகுப்பினர் என்றும், வேறு மதத்தில் உள்ளவர்கள் இஸ்லாமியர்கள் என்றும், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்கள் மோஸ்ட் பாக்வர்ட் என்றும் பலவகையாக அதைப் பிரித்திருக்கிறார்கள்.

திரு. வ. ஜார்ஜ் : பட்டியலிலே சிறுபான்மை வகுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சலுகை கிருஸ்தவர்களுக்கும் அளிக்கப்படுகிறதா? அப்படி அளிக்க திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த விஷயத்தில் என் பூரணமான அனுதாபம் உண்டு.

THIRU K. VINAYAKAM : Is the Hon. the Chief Minister aware of the fact that in the matter of recruitment to Government jobs, the 'Communal G.O.' was being followed by the Governments in the past? On the basis of that Government Order, in proportion to their respective population, some sort of quota for each community, that is, so many posts for Brahmins, so many for Non-Brahmins, so many for Christians, so many for Most Backward people and so on had been fixed. May I know whether this Government Order is being adhered to now or whether it has been given up? What is the policy of the Government so far as representation to these minorities are concerned?

THE HON. THIRU C. N. ANNADURAI : The present system is a liberalisation of the old order.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மைனாரிட்டி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அரசியல் சட்டத்திலே இருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு உத்தியோகச் சலுகை கொடுக்க வேண்டிய தன்மை இல்லை. மற்ற இனங்களுக்கு இருப்பது போல் அவர்களுக்கும் இனிமேலாவது ஒதுக்குவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : கனம் குடியாத்தம் தொகுதி உறுப்பினருடைய இந்த ஆதரவான உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். அவர்கள் கோருவது போலவே அது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. ஆனால் அது இந்தியா முழுவதற்குமாக கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை.

DR. H. V. HANDE : Until last year, Latin Catholics and S.P.Gs. in Kanyakumari district were included in the list of backward communities. But, in the prospectus relating to the Medical Colleges, it is found that the names of these communities have been omitted in the list of backward communities. May I know whether this omission is accidental or intentional? If it is accidental, will the Hon. the Chief Minister consider the necessity for removing this anomaly?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am glad that the hon. Member has pointed out the anomaly. I will look into it.

திரு. ப. மகாதேவன் : பெண்களின் பெயர்களுக்குப் பிறகு பிள்ளை என்றோ, செட்டியார் என்றோ, முதலியார் என்றோ இல்லாத மாதிரி ஆண்களும் ஜாதிப் பட்டங்களை உபயோகிக்கக் கூடாது என்று சட்டம் வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்தப் பட்டங்களை விட்டுவிட்டோமென்று சொல்லுகிறவர்களும் ஜூன்-ஜூலை மாதங் மாதங்களில் மறவாமல் போடுகிறார்கள்.

1967 ஜூன் 24]

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்த ஆதித் திராவிடர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் கிருஸ்தவ ஆதித் திராவிடர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இதைத் திருத்த மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா ? மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையெனில் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து அதைத் திருத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : தமிழ்நாடு பூராவும் இனம் இனமாகப் பிரிந்திருப்பதை ஒரே இனமாக மாற்றும் உத்தேசம் உண்டா ?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நான் குறிப்பிட்டுச் சொன்னபடி சில ஜாதிகளின் பெயர்களைச் சொல்லிக் கொள்வதிலே லாபம் கிடைக்கிற நிலை இருக்கிறவரையில் ஜாதிபேதம் ஒழியாது என்பதுதான் என்னுடைய கருத்து. லாபமற்ற நோக்கத்தோடு ஜாதியைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக ஜாதிப் பிடிப்புகள் இப்போது வெகுவாகக் குறைந்து வருகின்றன. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடி அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் ஒரு சர்க்கார் கை வசம் எப்போதும் இருக்க முடியாது. பொதுமக்களிடத்தில் தொடர்பு கொண்டவர்கள்தான் அந்த ஜாதிப் பிடிப்பை நீக்குவதற்குப் பாடுபட வேண்டும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இந்து ஆதித் திராவிடர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் மதம் மாறியவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. மத்திய சர்க்காரில் ஒரு நிலைமையும், மாகாண சர்க்காரில் ஒரு நிலைமையும் இருக்கிற நிலையில் இதை மாற்ற இந்த அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை: இதேவிதமான மற்றொரு அங்கத்தினரின் கேள்விக்கு அளித்த பதிலைக் கவனப் படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

திரு. பி. ஜயராஜ் : மைனாரிட்டி வகுப்பினரான பிராமணர்களுக்கு இந்த மந்திரிசபையில் இடம் கொடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினா அரசு ஊழியர்களை நியமிப்பது பற்றியது. உறுப்பினருடைய துணைவினா இதிலே எழவில்லை.

திரு. ஆர். நாகசுந்தரம் : தாழ்ந்தப்பட்ட சமூகத்திற்குள்ளேயே பள்ளர்கள் பறையர்களுக்கிடையே யார் உயர்வு என்பதிலே சண்டைகள் ஏற்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதைத் தெரிந்து கொள்வதிலே அதிகமான அக்கறை இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : ஜாதியைக் குறிக்கும் பெயர்களை நீக்க சட்டம் வருமா என்று கேட்ட உறுப்பினர் அவர்களே மகாதேவன் பிள்ளை என்று வைத்துக் கொண்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தச் சுவையான செய்தியைக் கேட்டு வியப்படைகிறேன்.

திரு. ப. மகாதேவன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய பெயரைக் குறிப்பிட்டதால் ஒரு விளக்கம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'தன்நிலை விளக்கம்' என்று சொல்ல வேண்டும். 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' அல்ல.

திரு. ப. மகாதேவன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் 'பிள்ளை' என்ற பட்டம் இருக்கக்கூடாது என்று முன்பே எழுதிக் கொடுத்திருக்கிறேன். தற்போது சட்டமன்ற ஏடுகளில் ப. மகாதேவன் என்றுதான் இருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : On a point of order, இந்தச் சபையில் பறையர், பள்ளர் என்ற ஜாதிப் பாகுபாடு இருக்கக் கூடாது என்ற நிலைமையில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சபையில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய நிலையில் பறையர்கள், பள்ளர்கள் என்ற பதங்களை உபயோகப்படுத்தி இந்தச் சபையில் பேசுவது இந்தச் சபையிலே அங்கத்தினர்களாக இருப்பவர்களைக் கேவலப்படுத்துவதாக ஆகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருடைய கேள்வியில் அந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன?

ஒரு குரல் : திரு. நாகசுந்தரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது என்று சொல்ல முடியாது. கூடியவரையில் அத்தகைய சொற்களைத் தவிர்க்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

ஆசிரியர்களுக்கு வீடு

* 64 வினா—திரு. பெ. மலைச்சாமி : திரு. ரா. ரா. முனுசாமி: } மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொடக்கப்பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசு வீடு கட்டித் தரும் திட்டத்தை வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்காக குடியிருப்பு வசதியளிக்க நான்காவது திட்ட வரைவு அனுமதிக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கோ அல்லது கல்லூரி ஆசிரியர்களுக்கோ குடியிருப்பு வசதி அளிக்க எந்தத் திட்டமுமில்லை.